# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 56/2020 | **CNR No.** | **:** | TNKI130-00084-2020 |
| **Name** | **:** | சம்பத் | **Father's Name** | **:** | ராமலிங்கம் |
| **Witness for** | **:** | Plaintiff | **Calling** | **:** | PW1 |
| **Age** | **:** | 40 | **Village** | **:** | கே.பாப்பாரப்பட்டி |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 4:25 PM | **End Time** | **:** | 06:00 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 03.09.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் அவ்வளவாக தெரியாது. எனது முதல் விசாரணை பிரமாணபத்திரத்தில் உள்ள சங்கதிகள் யார் எனக்கு சொன்னார்கள் என்றால் எனது வழக்கறிஞர் எனக்கு படித்து காண்பித்தார். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தாத்தா எனக்கு எழுதி கொடுத்த சொத்து அவர்கள் உடையது என்று பிரதிவாதிகள் வந்தார்கள் அதனால் தாக்கல் செய்துள்ளேன்.

(2) வழக்குரையில் 1ம் இன சொத்தின் சர்வே எண்கள் என்னவென்றால் சர்வே எண். 217/5, 217/1, 217/2 ஆகும். 2ம் இன சொத்தின் சர்வே எண்கள் என்னவென்றால் சர்வே எண்.217/2 ஆகும். எவ்வாறு 2ம் இன சொத்து எனது தாத்தாவிற்கு பாத்தியம் என்றால் எனது தாத்தா மாட்டு கொட்டாய் போட்டு நீண்ட காலம் சுவாதினத்தில் இருந்தார் அதனால் பாத்தியமாகும். எனது முதல் விசாரணை பிரமாணபத்திரத்தில் 1ம்

இன சொத்தில் தான் மாட்டு கொட்டாய் அமைந்துள்ளதாக சொல்லும் நிலையில் 2ம் இன சொத்தில் அவ்வாறு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் இன சொத்து எனது தாத்தாவிற்கு சொந்தமானது என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரம், வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேன். எனது தாத்தா பெயரில் உள்ள ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வா.சா.ஆ1 முதல் 9 ஆவணங்களை காட்டப்பட்டு, என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரமும் வில்லங்க சான்றும் தாக்கல் செய்துள்ளேன். எந்த ஒரு ஆவணமும் இல்லாமல் எனது தாத்தாவிற்கு தானசெட்டில்மென்ட் எழுத உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் நானும் எனது தாத்தாவும் மோசடியாக உருவாக்கியது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் இணைப்பாக வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் இல்லை என்றும் நான் சொல்வது போல் உண்மையான பத்திரமாக இருந்திருந்தால் அவை இணைத்து பதிவு செய்யப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

(3) சர்வே எண்.217/5 ன் விஸ்த்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.217/1, சர்வே எண்.217/2 நிலங்களின் விஸ்த்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 217/2ன் செக்குபந்தி விவரங்கள் தெரியுமா என்றால் கிழக்கில் கோபால் நிலம், மேற்கில் படவட்டாள், லட்சுமி நிலம், வடக்கில் கிருஷ்ணன் நிலம் மற்றும் தெற்கில் பொன்னுரங்கன் நிலம் ஆகும். சர்வே எண் 217/2ன் செக்குபந்தி தவறானது என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பெயரில் மோடியாக ஆவணம்

ஏற்படுத்தியதாக சொல்லும் நிலையில் இது குறித்து 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன், வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் ஞாபகம் இல்லை. 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் நேரில் சென்று மனு அளித்தேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி வைத்திருந்த ஆவணம் மோசடியான ஆவணம் இல்லை என்பதால் தான் அவ்வாறு எந்த மனுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

(4) சர்வே எண் 217/5ல் என்ன உள்ளது என்றால் மோல்டு வீடு உள்ளது. சர்வே எண் 217/1ல் என்ன உள்ளது என்றால் அதிலும் ஒரு மோல்டு வீடு உள்ளது. நான் சொல்வது போல் சர்வே எண் 217/1ல் எந்த வீடும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.217/1ல் இருப்பதாக சொல்லும் வீட்டிற்கு வரி கட்டியுள்ளேனா என்றால் வரி கட்டியுள்ளேன். சர்வே எண்.217/2ல் என்ன உள்ளது என்றால் மாட்டு கொட்டாய், பில்போர் மற்றும் தாத்தா கட்டிய வீடு உள்ளது. அந்த வீட்டிற்கு நான் வரி செலுத்துகிறேனா என்றால் பிரச்சனை ஏற்பட்டதால் யாரும் கட்டவில்லை. எந்த ஆண்டில் இருந்து அவ்வாறு பிரச்சனை உள்ளது என்றால் எனது தாத்தா இறந்ததில் இருந்து பிரச்சனை உள்ளது. எனது தாத்தா எப்போது இறந்தார் என்றால் வருடம் ஞாபகம் இல்லை, 2013க்கு மேல் இருக்கும். தாத்தா இருக்கும் வரை எந்த பிரச்சனையும் இல்லை தாத்தா இறந்த பிறகு தான் பிரச்சனை ஏற்பட்டது.

(5) எனது முதல் விசாரணை சாட்சியமும் குறுக்கு விசாரணை சாட்சியமும் ஒன்றுக்கொன்று முரன்பட்டுள்ளதால் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பிரச்சனை

சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் ஆண்டாள் என்பவர் மீது புகார் அளிக்கப்பட்டு காவல் நிலையத்தில் சமாதனம் பேசினார்கள், 2ம் பிரதிவாதிக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் அது தற்போது தான் ஏற்பட்டது. எப்போது ஏற்பட்டது என்றால் சுமார் 2-3 ஆண்டுகள் இருக்கும். 2020ம் ஆண்டு முதல் எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை இருந்து வருகிறது என்றும் 2ம் பிரதிவாதி என் மீது நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான், என்னை அழைத்து விசாரித்தார்கள், நான் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் நீதிமன்றத்தில் தீர்வு காண வேண்டும் என்று விசாரணையில் சொல்லியுள்ளேன், மீண்டும் என்னை அழைத்து விசாரித்தார்கள். எத்தனை முறை விசாரணைக்கு சென்றேன் என்றால் 2-3 முறை சென்றேன், எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. போலிசார் ஏதாவது அறிக்கை தயார் செய்து என்னிடமும் 2ம் பிரதிவாதியிடமும் கையொப்பம் வாங்கினார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை, ஆனால் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் வழக்கறிஞர் மூலம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று விசாரணையில் கூறினேன்.

(6) நில அபகரிப்பு சிறப்பு பிரிவில் விசாரணை செய்த போது என்னுடைய தாய்பத்திரங்களை எடுத்து வர சொல்லி சொன்ன போது எடுத்து வருவதாக சொல்லிவிட்டு பிறகு விசாரணைக்கு வராமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா பெயரிலோ அல்லது எனது பெயரிலோ வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் இல்லை என்று வழக்கு மூலம் இல்லாததால் தான் எவ்வித ஆவணங்களும் தாக்கல்

செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, எனது தாத்தா கொடுத்த அனைத்து ஆணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 காண்பிக்கப்பட்டு, 3ம் பக்கத்தில் இந்த தானசெட்டில்மென்ட் பத்திரம் படி பட்டா மாற்றி கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில் நான் எனது பெயரில் பட்டா மாற்றி கொண்டேனா என்றால் இல்லை, நான் வெளியில் இருந்ததால் மாற்ற இயலவில்லை.

(7) கடந்த 16 வருடங்களாக நான் வெளியூரில் இருந்து வந்தேனா என்றால் இல்லை அவ்வப்போது வருவேன், செல்வேன் எனது தாத்தா, அப்பா இருந்ததனால் ஆவணங்களை கண்டுக்கொள்ளவில்லை. தானசெட்டில்மெண்ட் ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதால் தான் பட்டா மாற்றவில்லை என்று சொன்னல் சரியல்ல, எனது தாத்தா இருந்ததனால் நான் கவனிக்கவில்லை. 2ம் இன சொத்தில் சர்வே எண். 217/2 ல் எனது தாத்தா பெயரில் பட்டா, சிட்டா எதுவும் இல்லை அதனால் தான் என் பெயரில் பட்டா மாற்ற முடியவில்லை என்றால் சரியல்ல. 2ம் இன சொத்திற்கு எனது தாத்தா பெயரில் எந்த வருவாய் துறை ஆவணங்களும் இல்லை என்று சொன்னால், எனது தாத்தா, அப்பாவிற்கு தான் தெரியும். ஆவணங்கள் பற்றி தெரியாத நிலையில் அவருக்கு எவ்வாறு 2ம் இன சொத்து அவருக்கு பாத்தியம் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சிறு வயதாக இருக்கும் போதிலிருந்தே அங்கு தான் மாட்டு கொட்டாய் அமைத்து அனுபவம் செய்து வருகிறார்.

(8) கடந்த 01.09.2020ம் தேதி பிரச்சனை ஏற்பட்டது என்றும் தடுத்து நிறுத்த உதவிய ஊர் பொதுவர்கள் யார் யார் என்று பெயர்கள்

சொல்லாததால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் 4ம் பத்தியில் சர்வே எண்.217/1ல் தான் மாட்டு கொட்டாய் கட்டியுள்ளதாகவும் மற்ற இடங்களை காலி ஜாகாவாக தான் வைத்துள்ளதாக என்று சொல்லியுள்ளேன் என்றால் இரண்டு வீடுகள் உள்ளது. நான் எனது வழக்குரையில் காலி ஜாகாவாக உள்ளதாக கூறி தற்போது வீடு உள்ளதாக முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது முதல் விசாரணை பிரமாணபத்திரத்தில் சர்வே எண் 217/1ல் மாட்டுக்கொட்டாய் கட்டியும் மீதம் உள்ள சொத்துக்களை காலி மணையாக வைத்து அனுபவம் செய்து வருவதாக தான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் காலிமனை உள்ளது, வீடும் உள்ளது மற்றும் மாட்டுக்கொட்டாயும் உள்ளது.

(9) எனது தாத்தாவிற்கு மேற்படி நிலங்கள் எவ்வாறு வந்தது என்று சொன்னால் நான் சிறு வயதில் இருந்தே அங்கு தான் உள்ளேன், எனது தாத்தா, அப்பா அவர்கள் சுவாதினத்தில் வைத்து அனுபவம் செய்து வந்தார்கள். அவர்களுக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் நத்தம் நிலங்களில் வீடு இல்லாத ஏழைகளுக்கு கொடுக்ககூடிய இடங்கள் என்றும் அதில் சர்வே எண்.217/5 மட்டும் தான் எனது தாத்தாவிற்கு வழங்கப்பட்டது என்று சொன்னால் அனைத்து வழக்கு சொத்துக்களும் தான் எனது தாத்தா அனுபவித்து வந்தார்.

(10) சர்வே எண்.217/2, 2ம் பிரதிவாதிக்கு அரசாங்கத்தில் பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, மோசடியாக பெறப்பட்டதாக இருக்கலாம் எனது தாத்தா தான் அனுபவத்தில் இருந்தார். சர்வே எண்

217/1 அரசு புறம்போக்கு நிலமாக தான் உள்ளது என்றும் அதில் யாருக்கும் பட்டா வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.217/1க்கு எனது தாத்தா பெயரில் பட்டா உள்ளதா என்றால் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன். அரசாங்க நிலத்தை ஆக்கிரமிப்புசெய்துள்ளதாக என் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது என்று சொன்னால் சரிதான், ஆனால் அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை, அது தள்ளுபடி ஆகிவிட்டது.

(11) நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை பிரமாணபத்திரத்தில் 9ம் பத்தியில் எனது தாத்தா எனக்கு தானசெட்டில்மென்ட் மூலம் 1,2 சொத்துக்களை கொடுத்தார் என்று சொல்லியுள்ளது பொய் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணை பிரமாணபத்திரத்தில் 10ம் பத்தியில் 2ம் இன செத்தில் 2ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் தான் பிரச்சனை செய்து வருகிறார்கள்.

(12) எனது தாத்தா பெயரில் உள்ள எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எந்த வித தாய் பத்திரமும் இல்லாமல் 2009ல் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மென்ட் பத்திரம் செல்லதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.217/5 மட்டும் தான் எனது தாத்தாவிற்கு சொந்தமான நிலம் என்றும் சர்வே எண்.217/1 மற்றும் சர்வே எண்.217/2 பொறுத்து எனது தாத்தாவிற்கு பத்திரம் எழுத எவ்வித உரிமையும் இல்லை

என்றும் அது 2ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. இடைக்கால தடை உத்தரவு இடை மனு எண்.2/2020 எனது வழக்கில் எந்த முகாந்திரமும் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 2ம் இன சொத்து 2ம் பிரதிவாதிக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சொத்து என்றும் 2ம் இன சொத்தில் எனது தாத்தாவிற்கோ எனக்கோ எவ்வித உரிமை மூலமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு நான் அளித்த புகாரில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் தான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(13) எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்டதாக சொல்லும் தகராறு குறித்து காவல் நிலையத்தில் எந்த புகாரும் அளித்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் உண்மையாக பிரச்சனை ஏற்பட்டிருந்தால் புகார் அளித்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும் அதை ஊர் பொதுவர்கள் தடுத்து நிறுத்தினார்கள் என்று சொல்லும் நிலையில் ஊர் பொதுவர்கள் பெயர்களை சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு உண்மையில் நடந்திருந்தால் அவர்கள் பெயர்களை சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் இன சொத்தில் 20 வருடங்களுக்கு முன்பு இருந்து கட்டிடங்கள் உள்ளது என்றும் கட்டிடம் கட்ட முயற்சி செய்தார்கள் என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தான் 2ம் இன சொத்தில் கட்டிடம் கட்டி அனுபவித்து வருகிறார் என்றும் மேற்படி கட்டிடத்தில் பால் கடை வைத்துள்ளார் என்றும் பில்போர் அனுபவித்து வருகிறார் என்று

சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும், புகைப்படத்தில் உள்ள கட்டிடம் 2ம் இன சொத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். **(புகைப்படங்கள் (எண்ணிக்கை–3) –அசல்– பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அதில் சந்தோசா என்ற பால் கடை உள்ளது என்று சொன்னால் சரிதான், அதை 2ம் பிரதிவாதி கட்டவில்லை அவருக்கு வாடகையும் செலுத்தப்படவில்லை. 2ம் இன சொத்தில் தான் புகைப்படங்களில் உள்ள கட்டிடமும் பில்போரும் இருந்தது என்று சொன்னால் சரிதான், ஆனால் அது எனது தாத்தாவிற்கு சொந்தமானது. அது எனது தாத்தா கட்டி எனது அத்தை வாடகைக்கு கட்டி விட்டார். எனது தாத்தா தான் அந்த கட்டிடம் கட்டினார் என்று காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. 2ம் இன சொத்தில் எனது தாத்தா கட்டிடம் கட்டியதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எந்த உரிமை மூலமும் இல்லாமல் எனது தாத்தா ஏற்படுத்திய தானசெட்டில்மென்ட் பத்திரம் 2ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட 2ம் இன சொத்து அபகரிக்க வேண்டும் என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு எந்த ஒரு முகாந்திரமும் வழக்கு மூலமும் இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND

District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai